**<u>(சார்பு நீதிமன்றம்), பரமத்தி</u>**

**ஓ.எஸ்.எண்.87/2022** **நாள். 11.03.2026**

2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 11-ம் நாள் 1ம் பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

**<u>பி.சா.1 கருப்பண்ணன் த/பெ. கருப்பண்ணகவுண்டர்</u>**

**<u>2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எனது மனைவி பெயர் சிந்தாமணி, அவர் தற்போது உயிருடன் உள்ளார். வழக்கு சொத்துக்கள் அனைத்தும், எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் ஆகும். 1986ம் ஆண்டு, வழக்கு சொத்துக்கள் நானும், எனது அப்பாவும் பாகம் பிரித்துக்கொண்டோம். மேற்படி பாகப்பிரிவினையில், எனது பெற்றோர் 52 செண்ட் நிலத்தை மட்டும் வைத்துக்கொண்டு, மற்ற சொத்துக்களை எனக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். பின்னர் எனது பெற்றோருக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட 52 செண்டை 1987ல் எனக்கு எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரிதான். எனது பெற்றோர்கள் எனக்கு 52 செண்டை எழுதிக்கொடுக்கும்போது, அதற்கு நான் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, நான் பணம் கொடுத்தேன். நான் எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் ரூ.7500/- கொடுத்தேன்.

2) மேற்படி சொத்தை தவிர நான் எனது பெயரில் வேறு சொத்துக்கள் கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். எனது பெற்றோர்கள் எழுதிக்கொடுத்த 52 செண்ட் நிலத்தை நான் வைத்துக்கொண்டு, மீதி சொத்துக்களை எனது மகனுக்கு 1990-ம் ஆண்டு பாகப்பிரிவினை பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தை எழுதிக்கொடுத்த பிறகு,

எனது மகன்தான் அவருக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல, நான்தான் சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறேன். எனது மகனுக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களின் பட்டா, எனது மகன் பெயருக்கு மாறிவிட்டது என்றால் சரிதான்.

3) 2016–ம் ஆண்டு, எனக்கு பாத்தியப்பட்ட 52 செண்டும், எனது மகனுக்கு பாத்தியப்பட்ட மற்ற சொத்துக்களையும், காண்பித்து, பரமத்தி கூட்டுறவு வங்கியில், ஆதாரக்கடன் பத்திரம் எழுதிக்கொடுத்து ரூபாய் 3 லட்சம் கடன் பெற்றேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படுவதுதான் மேற்படி பரமத்தி கூட்டுறவு வங்கியில், எழுதிக்கொடுத்த ஆதாரக்கடன் பத்திரத்தின் அசல் என்றால் சரிதான். **அது பி.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி ஆவணத்தில் எனது மகன் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணம் எழுதி, பதிவு செய்த விவரத்தை எனது மகனிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். பி.சா.ஆ.1 ஆவணம் எழுதியது எனது மகனிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

4) 2022–ம் வருடம், எனது மகன் 2016–ம் ஆண்டு நான் ஆதாரப்பத்திரம் மூலம் பெற்ற கடனை, எனது மகன் மேற்படி கடன் தொகையை கட்டிவிட்டு, ரசீது எழுதி வாங்கினார் என்றால் சரியல்ல, நான்தான் பணம் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படுவதுதான் எனது மகன் கடனை கட்டியதற்கான ரசீதின் அசல் என்றால் சரிதான். **அது பி.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் பணம் கொடுத்தாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி ரசீதுக்கு பின்னிட்டு, எனது மகன் அவரின் பெயரில், கடன் பெற்றுள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கும், எனது மகனுக்கும் சுமார் 12 ஆண்டுகளாக பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல. சுமார் 6 மாதமாக பேச்சுவார்த்தை இல்லை.

5) நானும், எனது மகனும் எழுதிக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம், எனது மகன் பெயரில் ஏற்பட்ட பட்டா ஆகியவைகள் எனது மகளுக்கு திருமணம் ஆவதற்கு முன்பே எனது மகளுக்கு தெரியும் என்றால் சரியல்ல. தற்போது எனது மகளுடன் நான் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல, நான் தனியாக வசித்து வருகிறேன். எனது மகனுடன் உள்ள விரோதத்தினால், நான் எனது மகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) இந்த வழக்கிற்கு சம்மந்தப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் எனக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றால் சரிதான். இவ்வழக்கின் வாதி வளர்மதி எனது மகள் என்றால் சரிதான். வாதி 1988—ம் ஆண்டு பிறந்தார் என்றால் சரிதான். வாதிக்கு 2 வயது குழந்தையாக இருக்கும்போது, எனது மகள் குடும்ப சொத்தில் பங்கிற்கு வரக்கூடாது என்பதற்காக பெயரளவில் ஒரு பாகப்பிரிவினை பத்திரம் 14.06.1990 தேதியில் எழுதி பதிவு செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரமானது பெயரளவிற்கு ஒப்புக்காக எழுதப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களில் நான்தான் என் மகளுக்காகவும் சேர்த்து விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான்.

2) தற்போது எனது மகன் மோகன் என்னிடம் பணம் வாங்கிக்கொண்டுதான் வங்கியில் ஆதாரக்கடன் மூலம் பெற்ற கடனை அடைத்தார் என்றால் சரிதான். வங்கியில் பெற்ற கடனை அடைப்பதற்காக நான் கொடுத்த பணம், பூர்வீக சொத்தில் இருந்து வந்த வருமானத்தின் அடிப்படையில் வந்ததாகும். எனக்கும், எனது மனைவிக்கும் எனது மகன் சாப்பாடு போடுவது இல்லை. வாதி வளர்மதி பாகப்பிரிவினை கோரியுள்ளவாறு அவருக்கு பாகம் கொடுப்பதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கு

தாக்கல் செய்வதற்கு முன்பு, எனது மகள் என்னிடமும், எனது மகளிடமும் சுமுகமாக பாகம் பிரித்துக்கொடுக்க கேட்டார் என்றாலும், எனது மகன் ஒத்துக்கொள்ளவில்லை என்றாலும் சரிதான். வாதி வளர்மதி கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்றால் எனக்கு ஆட்சேபனை இல்லை.

Taken down by me in the open Court and read over to the witness and acknowledged by him /her to be Correct.

S NALINAKUMAR

Digitally signed by S NALINAKUMAR
Date: 2026.03.11 18:18:16 +0530

Sub Judge,
Paramathy